**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No.74 of 2024

Deposition of P.W.1

Name of the Witness: திருமதி.மாதம்மாள்

Date : 13.03.2025

**குறுக்கு விசாரணை**

நான் 8வது வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும். எனக்கு 1975ல் திருமணம் ஆனது. என்னுடைய சகோதரிகளுக்கு எனக்கு முன்பாகவே திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். 1 முதல் 3 வாதிகளுக்கு திருமணம் நடக்கும் போது எனது அம்மா உயிருடன் இருந்தார். எனக்கு திருமணம் ஆகும் போது எனது அம்மா உயிருடன் இல்லை. என் அப்பா தான் எனக்கு சீர்வரிசை கொடுத்து திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆனபிறகு தான் என் அப்பா இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். திருமணம் ஆனவுடன் நானும் எனது சகோதரிகளும் அவர் அவர் கணவர் வீட்டில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான்.

2) என் கணவர் பள்ளியில் Excutive Clerk ஆக பணி புரிந்தார். தற்போது ஓய்வு பெற்று விட்டார். என் கணவர் 2 ஏக்கர் விவசாய நிலமுள்ளது. நான் தாவா சொத்து இருக்கும் ஊரிலே நான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். 1ம் வாதி ஏலகிரியான்கொட்டாயில் திருமணம் ஆனதிலிருந்து அங்கேயே இருக்கிறார். தாவா சொத்துக்கள்

அமைந்திருக்கும் இடத்திற்கும் ஏலகிரியான்கொட்டாய்க்கும் 10 கிமீ தூரம் இருக்கும். 1ம் வாதிக்கு விவசாய நிலமுள்ளது. எவ்வளவு நிலம் என்று எனக்கு தெரியாது. 2ம் வாதிக்கு கடகத்தூரில் அவருக்கு திருமணம் ஆனதலிருந்து வாழ்ந்து வருகிறார். தாவா சொத்துக்கள் அமைந்திருக்கும் இடத்திற்கும் கடகத்தூருக்கும் 2 கிமீ தூரம் இருக்கும். 2ம் வாதிக்கு விவசாய நிலமுள்ளது. எவ்வளவு நிலம் என்று எனக்கு தெரியாது.

3) 3ம் வாதிக்கு இண்டூர் அருகில் கொனபள்ளத்தில் அவருக்கு திருமணம் ஆனதலிருந்து வாழ்ந்து வருகிறார். தாவா சொத்துக்கள் அமைந்திருக்கும் இடத்திற்கும் கொனபள்ளத்திற்கு 15 கிமீ தூரம் இருக்கும். 3ம் வாதிக்கு விவசாய நிலமுள்ளது. எவ்வளவு நிலம் என்று எனக்கு தெரியாது.

4) நானும் மற்ற வாதிகளும் தாவா சொத்தில் எப்போதுமே பிரதிவாதிகளுடன் கூட்டு அனுபவத்தில் இல்லை என்றும், விவசாயமும் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா இறக்கும் வரை 1, 2 பிரதிவாதிகளுடன் தான் வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான். நாங்களும் சென்று அவரை பார்ப்போம். தாவா சொத்துக்கள் எனது பாட்டன்மார்கள் சம்பாதித்தது. தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அது போல் நான் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் இல்லை என்றாலும் என் அப்பா சுயமாக வாங்கினார் என்றால் சரியல்ல. என் அப்பா விவசாயம் தான் செய்து வந்தார்.

5) என் அப்பா 24.07.1959ல் ஒரு மன்னன் (எ) சேவான் மகன் திருப்பதியிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. என் அப்பா 16.09.1961ல் ஒரு முருக்கப்ப செட்டியார் மகன் சுப்பிரமணிய செட்டியாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. என் அப்பா தாவா சொத்துக்களை கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. என் அப்பா எதுவுமே சம்பாதிக்கவில்லை. என் அப்பா அவர் சம்பாதித்த சொத்துக்களை 2ம் பிரதிவாதிக்கு 26.09.2008ல் உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார் என்றாலும், அது பற்றி எனக்கு தெரியும் என்றால் அது போல் இல்லை. என் அப்பாவிற்கு உரிமையுள்ள சொத்தை அவர் யாருக்கு வேண்டுமானாலும் என்ன ஆவணம் எழுதி கொடுக்கலாம் என்றாலும் என் அப்பா 2ம் பிரதிவாதிக்கு உயில் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

6) என் அப்பா உயிருடன் இருந்த காலத்திலிருந்து 2015 வரை 2ம் பிரதிவாதி தான் தாவா சொத்துக்களில் விவசாயம் செய்து வந்தார் என்றாலும், வாதிகளாகிய நாங்கள் அதில் எப்போதுமே கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி விவசாயம் செய்வார். எங்களுக்கும் விளைச்சலில் கொடுப்பார். 2ம் பிரதிவாதி விற்ற சொத்துக்கள் போக மீதியிருக்கும் சொத்துக்களை 2015லிருந்து தற்போது வரை அதில் விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதிகளாகிய நாங்கள் தாவா சொத்துக்களில் விவசாயம் செய்யவில்லை. 1,2 பிரதிவாதிகள் எங்களுக்கு விளைச்சலில் கொடுப்பார்கள்.

7) என் அப்பா இறப்பதற்கு முன்பாக விளைச்சலில் கொடுத்தார்கள். அதற்கு பின்பாக கொடுப்பதில்லை. விளைச்சலில் என்ன என்ன கொடுத்தார்கள் என்று தற்போது சொல்ல முடியாது. அப்பப்ப கொடுப்பார்கள். விளைச்சலில் வரும் பொருள்களை கொடுத்தார்கள் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. வாதிகளாகிய எங்களுக்கு போதுமான விவசாய நிலங்கள் உள்ளது என்றாலும் அதில் போதுமான வருமானம் உள்ளது என்றாலும், தாவா சொத்துக்களில் விளைச்சலில் இருந்து எங்களுக்கு எப்போது பொருள்கள் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

8) 2012ல் 2ம் பிரதிவாதிக்கு பாகம் பிரித்து கொடுக்க வேண்டும் என்றும் அவ்வாறு பாகம் பிரித்து கொடுக்கவில்லை என்றால் வழக்கு போடுவோம் என்று அறிவிப்பு கொடுத்தோம் என்றால் சரிதான். அந்த அறிவிப்பிற்கு 2ம் பிரதிவாதி பதில் கொடுத்தார் என்றால் சரியல்ல. தருமபுரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பாகபிரிவினை கேட்டு ஓ.எஸ்.121/2012 என்ற வழக்கு போட்டோம். 2ம் பிரதிவாதி சமாதனமாக போய்விடலாம் என்று வழக்கை வாபஸ் பெறுமாறு சொன்னார். அதனால் நான் வழக்கை நடத்தவில்லை. அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. பின்பு பஞ்சாயத்து பேசப்பட்டது. ஆனால் 2ம் பிரதிவாதி எங்களுக்கு பாகம் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார். நான் சொல்வது போல் 2ம் பிரதிவாதி சமாதனமாக போகலாம் என்று

சொல்லவில்லை என்றாலும் நாங்களை வழக்கை நடத்த முன் வராத காரணத்தினால் வழக்கு தள்ளுபடியாகி விட்டது என்றால் சரியல்ல.

9) வழக்கு போடுவதற்கு முன்பாக 2ம் பிரதிவாதியிடம் நாங்கள் பாகம் கேட்டோம். நான் அதுபோல் கேட்கவில்லை என்பதால் தான் கேட்ட தேதி, மாதம் நியாபகம் இல்லை என்றால் சரியல்ல. அந்த வழக்கு தள்ளுபடியான உடன் நாங்கள் கூட்டாக விவசாயம் செய்யவில்லை. கொளகத்தூரில் ஊர்கவுண்டா் மற்றும் பஞ்சாயத்து தலைவர் முன்னிலையில் பஞ்சாயத்து பேசப்பட்டது. எப்போது பேசப்பட்டது என்று நியாபகம் இல்லை. ஒஎஸ் 121/2012 வழக்கு போடுவதற்கு முன்பாகவோ அல்லது இந்த வழக்கு போடுவதற்கு முன்பாகவோ பாகம் சம்பந்தமாக பஞ்சாயத்து பேசவில்லை என்றால் சரியல்ல.ஒ.எஸ். 121/2012 வழக்கும், இந்த வழக்கும் பாகபிரிவினை கேட்டு தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய அதிகாரம் இல்லை என்றாலும் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஒஎஸ் 121/2012 வழக்கை தான் திரும்ப கோப்பிற்கு எடுத்து கொள்ள வேண்டும் என்று மனு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும் இந்த வழக்கை தாக்கல் செய்ய எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. ஒஎஸ் 121/2012 வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க வேண்டும் என்றால் அதற்கு கால தாமதம் அதிகமான வருடங்களாக இருப்பதால் அந்த வழக்கில் மனு

எதுவும் தாக்கல் செய்யாமல் புதியதாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10) 2ம் பிரதிவாதி 6 ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரமும், 6ம் பிரதிவாதி 7 முதல் 10 பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரங்கள் செல்லாது என்று கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட உயில் மூலம் தான் சொத்தை விற்றுள்ளார் என்றால் சரியல்ல. (வாதி தரப்பு வழக்கறிஞர் இந்த உயிலை பற்றி பதிலுரையில் சொல்லாததால் அது சம்பந்தபட்ட கேள்விக்கு ஆட்சேபனை செய்வதாக சொன்னார். அவர் ஆட்சேபனைக்கும் நிருபணத்திற்கும் உட்பட்டு பதிவு செய்யப்படுகிறது.) வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.10 ஆவணங்கள் சட்டப்படி செல்லும் என்றால் சரியல்ல.

(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)